**C.C.No.11/2011** **02.07.2025**

**எதிரி தரப்பில் பிரிவு 311 Cr.P.C.–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டு, மீண்டும் PW1 அழைக்கப்பட்டு மறுவிசாரணை**

**Pw1– கண்ணன், த/பெ சுப்பிரமணி**

1) நான் பருத்திப்பால் வியாபாரம் செய்து வருகிறேன். நான் காலை 07.00 மணிக்கு வீட்டிலிருந்து பருத்திப்பால் வியாபாரம் செய்ய கிளம்பி, காலை 10.00 மணிக்கு திரும்பி வந்துவிடுவேன். நான் வியாபாரத்திற்கு சைக்கிளில் 2, 3 கி.மீ செல்வேன். அதனால் எனக்கு உடல் களைப்பு ஏற்படுமா என்றால், காலை 07.00 மணி என்பதால் களைப்பு ஏற்படாது. இறந்துபோனவர் எனக்கு என்ன முறை வேண்டுமென்றால், எனது தகப்பானரின் தம்பி, அவருக்கு குழந்தைகள் உள்ளார்களா என்றால், அவர் திருமணம் செய்துகொள்ளவில்லை, எங்களுடன் தான் இருந்தார். எதனால் அவர் திருமணம் முடித்துக்கொள்ளவில்லை என்றால், அது எனக்குத்தெரியாது.

2) எனது சித்தப்பா எத்தனை வருடங்களாக எங்களுடன் இருந்தார் என்றால், எனது திருமணம் முடிந்ததில் இருந்தே என்னுடன் தான் இருந்து வந்தார். எனது வீடு சந்திற்குள் கிழக்கு பார்த்த வாசல் என்றால், சரிதான். சிமெண்ட் ரோட்டில் இருந்து எங்கள் வீட்டு சந்து எத்தனை அடி துாரம் இருக்குமென்றால், பத்து அடி துாரமிருக்கும். பொதுவாக எங்கள் குடும்பத்தில், காலை நேரத்தில் வேலை எல்லாம் பார்த்துவிட்டு, இரவு எத்தனை மணிக்கு துாங்குவோம் என்றால், எங்கள் குடும்பத்தில் அனைவரும் துாங்க இரவு 11.00 மணி ஆகும். எங்கள் வீட்டின் முன்னால் வாய்க்கால் உள்ளதா என்றால், சரியல்ல, சிமெண்ட் ரோட்டை ஒட்டி வாய்க்கால் உள்ளது. எனது வீட்டிற்கு வடக்குபுறம் யாருடைய வீடு உள்ளது என்றால், முத்தையா வீடு உள்ளது. அவர்கள் உபயோகிக்கும் தண்ணீர் எந்த வழியாக செல்லும் என்றால், அவர்கள் வீட்டிற்கு வடபுறம் செல்லும். எனது வீட்டில் எத்தனை அறைகள் உள்ளது என்றால், இரண்டு அறைகள் உள்ளது, குளியலறை மற்றும் சமையலறை வீட்டிற்குள்ளேயே உள்ளதா என்றால், சமையலறை வீட்டிற்கு உள்ளே உள்ளது, குளியலறை வீட்டிற்கு வெளியே உள்ளது.

3) எங்கள் வீட்டின் தென்புறத்தில் கிழ–மேல் சிமெண்ட் ரோடு உள்ளதா என்றால், சரிதான். அந்த சிமெண்ட் ரோடு 10 அடி அளவு இருக்குமா என்றால், சரிதான்,

மூன்று சக்கர வாகனங்கள் செல்லுமளவிற்கு இருக்கும். கிழ–மேல் ரோடானது எத்தனை அடி துாரம் இருக்குமென்றால், சுமார் 100 அடி துாரம் இருக்கும். அந்த 100 அடி ரோட்டில் எத்தனை வீடுகள் இருக்குமென்றால், தோராயமாக 5 பிளாட்டுகள் இருக்கும். எங்கள் அக்கம் பக்கம் இருப்பவர்களும் துாங்க இரவு 11.00 மணி ஆகும் என்றால், அது எனக்கு தெரியாது. எங்கள் வீட்டின் முன்னால் மூன்று வேகத்தடை இருக்கிறதா என்றால், சரியல்ல, சிறிய ஒரு செ.மீ அளவிலான தடுப்புகள் ஒவ்வொரு வீட்டிற்கும் இடையே இருக்கும்.

4) எங்கள் வீட்டின் தென்புறத்தில் உள்ள சிமெண்ட் ரோட்டில் ஒவ்வொரு வீட்டிற்கும் 6 அடி நீளத்தில் தடுப்புகள் இருக்கும் என்றால், சரியல்ல, 2 அடி நீளத்தில் தடுப்புகள் இருக்கும். அந்த தடுப்புகளை தாண்டித்தான் வாகனங்கள் செல்லும் என்றால், சரிதான். அந்த தடுப்புகள் வாய்க்காலில் இருந்து 2 அடி இருக்கும் என்றால், சரிதான். சம்பவம் நடந்தது எத்தனை மணிக்கு, என்ன விவரம் தெரியுமா என்றால், தெரியும். மருத்துவமனைக்கு யார் யார் சென்றோம் என்றால், நான், எனது வீட்டிற்கு அருகில் உள்ள கதிரவன், வள்ளிநாயகம், கதிரவனின் மனைவி ஆகியோர் சென்றோம்.

5) புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால், சம்பவத்திற்கு மறுநாள் கொடுக்கப்பட்டது. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால், ஓரளவு தெரியும். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை யார் எழுதியது என்றால், கதிரவன் எழுதியிருக்கலாம் அல்லது போலீசார் எழுதியிருக்கலாம், சரியாக ஞபாகமில்லை. புகாரை யார் எழுதினார் என்று எனக்கு சரியாக தெரியாது என்றால், சரிதான். இழப்பீடு வழக்கு எதுவும் இது சம்பந்தமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அரசாங்கத்தில் இருந்து ஏதேனும் நிதியுதவி கொடுத்தார்களா என்றால், இல்லை.

6) எனது சித்தப்பாவிற்கு எந்தெந்த இடத்தில் காயங்கள் ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. நான் சொன்னதுபோல், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், அவ்வாறு சம்பவம் ஏதும் நடக்கவில்லை, சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது, எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை, எனது சித்தப்பா என்பதால் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால், சரியல்ல.